கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கல்விப்பீடம்

# கல்விமாணிக் கற்கைநெறி பருவம் III 2017/18

முதலாம் பருவம் 2018

## SC 408 பாடசாலை ஆலோசனை

நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

**பகுதி I இன் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து எவையேனும் விரும்பிய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.**

### பகுதி I

(i) “வழிகாட்டல்” என்ற பதத்தினை சுருக்கமாக விளக்குக.

(ii) பாசனின் மாதிரிகை என்றால் என்ன? விபரிக்குக.

(iii) ஆலோசனையின் நான்கு பிரதான துறைகளையும் பெயரிடுக.

(iv) பீதி (phobia) என்பதன் பொருள் யாது? உதாரணத்தின் உதவியுடன் விளக்குக.

(v) இருப்பியல்வாத அணுகுமுறையின்படி மனிதன் சஞ்சரிக்கும் மூன்று உலகங்களையும் பெயரிடுக.

(vi) அல்பேட் எலிஸினால் முன்வைக்கப்பட்ட நியாயித்தல் எழுச்சிக் கொள்கையில் குறித்தவாறாக A, B, C என்ற ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடப்படுவனவற்றை எழுதுக.

(vii) மொறில், ஒட்டிங் மற்றும் ஹேஸ்ட் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட மாதிரிகைக்கு அமைய தலையீடு செய்கின்ற மூன்று முறைகளையும் எழுதுக.

(viii) ஆலோசனை அமர்வொன்றில் வினவுதல் நுட்பத்தினைப் பயன்படுத்துகையில் கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள் இரண்டு குறிப்பிடுக.

(ix) ஆலோசனை அமர்வொன்றின்போது பொழிப்புக் கூறுதலானது முக்கியத்துவம் பெறுவதற்கான இரண்டு நியாயங்கள் தருக.

(x) பாடசாலையில் ஆலோசனை நிலையமொன்றினை நிறுவுவதாயின் கவனத்திற் கொள்ளவேண்டிய பிரதான அம்சங்கள் நான்கு எழுதுக.

### பகுதி II

(1) i. ஆலோசனை என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்தி ஆலோசனைக்கும் புத்திமதி கூறுதலுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துக.

(10 புள்ளிகள்)

ii. பாரம்பரிய சிகிச்சையளிக்கும் முறையின் சாதக பாதக தன்மைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(2) i. ஆலோசனையின் இரண்டு பிரதான துறைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுவதன் அவசியம் யாது என்பதுபற்றி வியாக்கியானம் செய்க.

(10 புள்ளிகள்)

ii. வாண்மைத்துவமிக்க ஆசிரியர் என்ற வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஆலோசனை ஒழுக்கக் கோவையினை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதுபற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

(3) i. கடந்த ஐந்து தசாப்த காலப்பகுதியில் அமெரிக்க ஆலோசனை சேவையின் வரலாறானது ஆலோசனை சேவையின் அபிவிருத்தியில் எவ்வாறான தாக்கம் செலுத்தியுள்ளது என்பதுபற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)

ii. வெற்றிகரமான ஆலோசனை அமர்வுக்கு ஒரு ஆலோசகரின் ஆளுமைப் பண்புகள் எந்த வகையில் துணைபுரியும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(4) i. அல்பேட் எலிஸினால் முன்வைக்கப்பட்ட நியாயித்தல் எழுச்சிப் பரிகார அணுகுமுறையின்படி A, B, C D, E, F ஆகிய ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படுவனபற்றி பொருத்தமான எடுத்துக்காட்டுகளின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பொருத்தப்பாடற்ற நடத்தையுடைய மாணவனை அவதானித்த பின்னர் ஒரு ஆசிரியரால் பேணப்பட வேண்டிய பதிவுகள் இரண்டினை பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

(5) i. சிக்மண்ட் புரொயிட்டின் உளப்பகுப்பு அணுகுமுறையின்படி தனியாளுக்கு பிரச்சினை ஏற்படுவதற்கான காரணம் யாது?

(10 புள்ளிகள்)

ii. கார்ள் ரோஜேர்ஸின் தனியாள் மைய ஆலோசனை அணுகுமுறையில் முன்வைக்கப்பட்ட நிபந்தனையற்ற ஆதரவு காட்டுதல் மற்றும் ஒத்துணர்வு ஆகிய திறன்களை வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதுபற்றி விதந்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(6) i. ஆலோசனையில் பயன்படுத்தப்படும் கவனித்தல் திறன்களை பட்டியற்படுத்தி அவற்றை ஆலோசனையின் வெற்றிக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. ஆலோசனையில் ஒத்துணர்வு என்பதால் கருதப்படுவது யாது எனக் குறிப்பிட்டு ஒரு ஆலோசகர் ஒத்துணர்வுடன் துலங்கும் சந்தர்ப்பங்களையும் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**************